

மாநில வர்த்தக அணி துணை செயலாளர் கிருஷ்ணகிரி பி.டி.அன்பரசன் இல்ல மணவிழாவில் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி மணமக்களை வாழ்த்தினார். இந்த வரவேற்பு நிகழ்ச்சியில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர் – சட்டமன்ற உறுப்பினர் தே.மதியழகன் , கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட செயலாளர் சட்டமன்ற உறுப்பினருமான ஒய்.பிரகாஷ், மாநில வர்த்தகர் அணி செயலாளர் கவிஞர். காசி முத்து மாணிக்கம்,மாவட்ட அவைத் தலைவர் நாகராஜ், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் முருகன், மாநில விவசாய அணி துணை செயலாளர் டேம்.வெங்கடேசன், மாநில வர்த்தகர் அணி துணை செயலாளர் கே.வி.எஸ் சீனிவாசன், உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



கோவை மாவட்டம், கூடலூர் நகராட்சி, வார்டு எண்27 ல், ரூ 4.50 இலட்சம் மதிப்பீட்டில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் புதிய அமைக்கப்பட்டுள்ள பேவர் பிளாக் சாலையை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர், கழக துணை பொதுச் செயலாளர், ஒன்றிய முன்னாள் அமைச்சர் ஆ.இராசா திறந்து வைத்தார். இதில் கோவை வடக்கு மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி, கழக விவசாய தொழிலாளர் அணி துணை செயலாளர், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள் பா.அருண்குமார், சி.ஆர்.ராமச்சந்திரன், தலைமை செயற்குழு உறுப்பினர் டி.ஆர். சண்முகசுந்தரம், கூடலூர் நகர்மன்றத் தலைவர் அ.அறிவரசு, காரமடை வடக்கு ஒன்றிய செயலாளர் எஸ்எம்டி. கல்யாணசுந்தரம், நகர்மன்ற துணைத்தலைவர் ரதி ராஜேந்திரன், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் அந்தோணி ராஜ் உள்பட மாவட்ட நகர, ஒன்றிய கழக நிர்வாகிகள், நகர்மன்ற உறுப்பினர்கள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



ஈரோடு மாநகராட்சி சூரம்பட்டி அணைக்கட்டில் இருந்து நஞ்சை ஊத்துக்குளி வாய்க்கால் பாசனத்திற்கு வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி தண்ணீர் திறந்து விட்டார். நிகழ்வில் ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், மாநகராட்சி ஆணையாளர் அர்பித் ஜெயின், ஈரோடு மாநகர கழக செயலாளர் மு.சுப்ரமணியம் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

# அரியலூர் மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் பங்கேற்பு!

அரியலூர், ஆக. 28 -

அரியலூர் மாவட்ட செயற்குழுக் கூட்டம் அரியலூர் புறவழிச்சாலையில் உள்ள வாணி மஹாலில் கழக சட்டத் திட்ட திருத்தக்குழு இணைச் செயலாளர் சுபா.சந்திரசேகர் தலைமையில் ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க. கண்ணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் எம்.பி.பாலசுப்ரமணியன் ஆகியோர்களின் முன்னிலையில் நடைபெற்ற கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கீழ்கண்ட தீர்மானங்களை விளக்கி சிறப்புரையாற்றினார்.

நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கையை கொடுக்கப்பட்டுள்ள இலக்கினை பூர்த்தி செய்து முடித்த அனைவருக்கும் பாராட்டுகளையும், வாழ்த்துக்களையும் இக்கூட்டம் தெரிவித்துக்கொள்கிறது.

கழகத் தலைவர் அவர்களின் உத்தரவுபடி கிளை கழகங்கள் தோறும் மினிட் நோட்டு போட்டு கிளை கழக கூட்டங்கள் நடத்தி தீர்மானம் நிறைவேற்றப்பட்டு தலைமை கழகத்திற்கு அனுப்பிவைக்க வேண்டும் என இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

கழகத் தலைவர் அவர்களின் உத்தரவுப்படி BLA2, BDA, BLC ஆகிய நிர்வாகிகளை திருத்தம் செய்து தலைமை கழகத்திற்கு அனுப்பிட இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது. இக்கூட்டத்தில் குன்னம் சட்டமன்றத் தொகுதி மேலிடப் பார்வையாளர் ஏ.கே.அருண், மாவட்ட துணை செயலாளர்கள் மு.கணேசன், சி.சந்திர சேகரன், லதாபாலு, ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் தனசேகர், இரா. கென்னடி, நகர கழக செயலாளர்கள் இரா.முருகேசன், வெ.கொ.கருணாநிதி, பேரூர் கழக செயலாளர் ப.கோபாலகிருஷ்ணன், ஒன்றிய கழக பொறுப்பாளர்கள், பூ.செல்வராஜ், இரா.மணிமாறன், மா. அன்பழகன், ரெ. சக்கரவர்த்தி, ரெங்க.முருகன், கோ.அறிவழகன், ஆர்.கலியபெருமாள், வி.எழில்மாறன்,

இரா.அண்ணாதுரை, ப.தனவேல், தெய்வ. இளையராஜன், நா.கணேசன், பொன். செல்வம், கே.ஜி.எஸ்.முருகன், இரா. செந்தில்குமார், பேரூர் கழக செயலாளர் அ.அல்போன்ஸ், பொதுக்குழு உறுப்பினர்கள் சி.ஆர்.எம். பொய்யாமொழி, வி.எம். ஷாஜகான், சுமதி கருணாநிதி, மாவட்ட அணி அமைப்பாளர்கள் கே.சி. லூயிகதிரவன், க.தர்மதுரை, பானுமதி ராஜேந்திரன், இரா.குலோத்துங்கன், க.கருப்புசாமி, வை.முருகானந்தம் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் எஸ்.ஆர். முருகேசன், வீர.சிவா, தர்மராஜ், ச.வசந்தபகலவன், பிரபாகரன் மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் வார்டு கிளைக் கழகத் தோழர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.



நாமக்கல் மாவட்ட விளையாட்டு மைதானத்தில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் மாவட்ட அளவிலான முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள் துவக்க விழாவில் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், மாவட்ட அளவிலான முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளை தொடங்கி வைத்தார். விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் துர்காமூர்த்தி, நாமக்கல் பாராளுமன்ற உறுப்பினர் வி.எஸ்.மாதேஸ்வரன், நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.ராமலிங்கம், மேயர் து.கலாநிதி, துணை மேயர் செ.பூபதி, மாவட்ட இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு அலுவலர் எஸ்.கோகிலா உட்பட துறைசாந்த அலுவலர்கள் மற்றும் விளையாட்டு வீரர், வீராங்கனைகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



கோவை மாவட்டம், வால்பாறை சட்டமன்றத் தொகுதி, வால்பாறை நகராட்சி அரசு உதவி பெரும் இருதய ஆரம்பப் பள்ளியில் " முதலமைச்சரின் காலை உணவுத்திட்டத்தை பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி தொடங்கி வைத்து மாணவச் செல்வங்களுடன் உணவு அருந்தினார். இதில் வால்பாறை நகர செயலாளர் குட்டி (எ) சுதாகர், வால்பாறை நகர்மன்றத் தலைவர் அழகுசுந்தரவள்ளி, மாவட்ட துணை செயலாளர் பொன்னுசாமி, நகராட்சி ஆணையாளர், மாவட்ட கல்வி அலுவலர், ஆசிரிய பெருமக்கள், அரசு அதிகாரிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# வேளச்சேரியில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம்!

சென்னை, ஆக.28-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (26.08.2025) சென்னை, வேளச்சேரி, 100 அடி சாலையில் நடைபெறும் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, பெறப்பட்ட மனுக்கள் மீது உடனடித் தீர்வுக்கான சான்றிதழ்களை வழங்கினார்.

பிறகு அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

"உங்களுடன் ஸ்டாலின்" திட்டம் முகாம் தமிழ்நாட்டில் முதல மைச்சர் அவர்கள் தினந்தோறும் ஒவ்வொரு புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தி தமிழ்நாட்டின் ஒட்டு மொத்த மக்களின் அடிப்படைத் தேவைகளையும், வாழ்வாதார தேவைகளையும் உடனடியாக நிறைவேற்றி வருகிறார்கள். ஏராள மான திட்டங்கள் தமிழ்நாட்டில் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. அந்தவகையில் மிகச் சிறந்த திட்டங்களில் ஒன்றான "உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தைப் பொறுத்தவரை தமிழ்நாட்டின் ஊரகப்பகுதிகளில் 6232 முகாம்கள் நடத்தப்படவிருக்கிறது. ஊரகப்பகுதிகளில் 46 வகையான சேவைகள், 15 துறைகளின் வாயிலாக நடத்தப்படவிருக்கிறது.

அதேபோல் நகர்ப்புறப் பகுதிகளைப் பொறுத்தவரை 3768 முகாம்கள் 43 வகையான சேவைகள் 13 துறைகளின் வாயிலாக வழங்க இருக்கிறது. அந்தவகையில் இந்த முகாம்களை பொறுத்தவரை கடந்த ஜூலை திங்கள் 15ஆம் தேதி பெருந்தலைவர் காமராசர் அவர்களின் பிறந்த நாளில் சிதம்பரம் நகராட்சியில் முதலமைச்சர் அவர்கள் இந்த சீரிய திட்டத்தை தொடங்கி வைத்தார்கள்.

இந்த திட்டம் ஜூலை 15 முதல் ஆகஸ்ட் 14 வரை 3561 முகாம்கள் நடத்தப்படும் என்றும், ஆகஸ்ட் 15 முதல் செப்டம்பர் 14 வரை 2859 முகாம்களும், செப்டம்பர் 15 தொடங்கி அக்டோபர் 14 வரை 2773 முகாம்களும், அக்டோபர் 15 முதல் நவம்பர் 14 வரை 807 முகாம்கள் என ஆக மொத்தம் 10,000 முகாம்கள் வரை நடத்தப்படவிருக்கிறது.

இதுவரை தமிழ்நாட்டில் நடைபெற்றுள்ள முகாம்களின் எண்ணிக்கை 4,419 ஆகும். ஏறத்தாழ 45% முகாம்கள் நடைபெற்றுள்ளது. இதுவரை நடைபெற்றுள்ள முகாம்களில் 36,49,399 மனுக்கள் பெறப்பட்டு அந்த மனுக்களுக்கு உடனடி தீர்வும், தீர்வு காண முடியாத மனுக்களுக்கு விளக்கமும் மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

அந்தவகையில் இன்று பெருநகர சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரை முதற்கட்டமாக 109 முகாம்கள் என்று அறிவிக்கப்பட்டு, 109 முகாம்களும் வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டுள்ளது. இரண்டாவது கட்ட முகாம்கள் என்கின்ற வகையில் 19.08.2025 முதல் 14.09.2025 வரை 148 முகாம்கள் என்று அறிவிக்கப்பட்டு நடத்தப்பட்டு வருகிறது.

அந்தவகையில் சென்னையில் மட்டுமே நடத்தப்பட்டு இருக்கின்ற முகாம்களின் எண்ணிக்கை 152. இந்த முகாம்களில் சென்னையில் மட்டுமே பெறப்பட்டிருக்கின்ற மனுக்களின் எண்ணிக்கை 3,40,689. பொதுமக்கள் மிகுந்த ஆர்வத்தோடு அவரவர் தேவைகளை நிறைவேற்றிக் கொள்கின்ற வகையில் இந்த முகாம்களுக்கு வருகிறார்கள். இந்த முகாம்கள் நடைபெறுகின்ற அனைத்து இடங்களிலும் மாற்றுத்திறனாளிகள் எளிதாக பயன்பெறும் வகையில் தன்னார்வலர்களும், மூன்று சக்கர வாகனங்களும் தயார்நிலையில் இருந்துக் கொண்டிருக்கிறது என்று கூறினார்.

# தி.மு.க. மகளிர் அணி

# மாவட்ட, மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

## தி.மு.க. மகளிர் அணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சன் அறிவிப்பு!

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி - மாவட்ட பொறுப்பாளர் ஒப்புதலோடு மகளிர் அணியின் மாவட்ட, மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

### விழுப்புரம் தெற்கு மாவட்டம்

தலைவர் - சிவமகேஸ்வரி ரெயில்வே ஸ்டேஷன் தெரு, முண்டியம்பாக்கம், விழுப்புரம் மாவட்டம் - 605601.

துணைத் தலைவர் - ப. வள்ளி 17, புதுக் குடியிருப்பு, காந்திக்குப்பம், திருவெண்ணெய்நல்லூர் வட்டம், விழுப்புரம் மாவட்டம் - 607203.

அமைப்பாளர் - மு. அமுதா 1/60, மெயின் ரோடு, கொடுங்கால் (ம) அஞ்சல், கண்டாச்சிபுரம் வட்டம், விழுப்புரம் மாவட்டம் - 605755.

துணை அமைப்பாளர்கள் - 1) ச. சுதா பெருமாள் கோவில் தெரு, ஆவியூர், திருக்கோவிலூர் வட்டம், விழுப்புரம் மாவட்டம் - 605757. 2) சு. கல்பனா மாதா கோவில் தெரு, நரசிங்கனூர், கஞ்சனூர் அஞ்சல், விக்கிரவாண்டி வட்டம், விழுப்புரம் மாவட்டம் - 605203. 3) மு. கோட்டீஸ்வரி பழைய தண்ணீர் தொட்டி தெரு, இராதாபுரம், விக்கிரவாண்டி வட்டம், விழுப்புரம் மாவட்டம் - 605501. 4) ஆ. கலைவாணி நடுத் தெரு, வெள்ளையாம்பட்டு, பனமலை அஞ்சல், விக்கிரவாண்டி வட்டம், விழுப்புரம் மாவட்டம் - 605201. 5) ச. புஷ்பலதா 15/9, நடுசெட்டித் தெரு, விக்கிரவாண்டி வட்டம், விழுப்புரம் மாவட்டம் - 605652. சமூகவலைதள பொறுப்பாளர்கள் 1) கு. சுவேதா மாட்டான் தெரு, வீரபாண்டி (ம) அஞ்சல், திருக்கோவிலூர் வட்டம், விழுப்புரம் மாவட்டம் - 605758. 2) அ. பிரவீனா மாதாகோவில் தெரு, புரவடை, கண்டாச்சிபுரம் வட்டம், விழுப்புரம் மாவட்டம் - 605755.

### திருப்பூர் வடக்கு மாவட்டம்

தலைவர் - பொ. தனலட்சுமி 18/363, குமரன் வீதி, கைகாட்டிப்புதூர் அஞ்சல், அவிநாசி தாலுக்கா, திருப்பூர் - 641654.

துணைத் தலைவர் - ரா. மணி 229ஏ, பிரபு இல்லம், கோவை ரோடு, அன்னூர், கோவை - 641653.

அமைப்பாளர் - நா. கௌரி 274, முத்து கோபால் நகர், 4வது வீதி, அனுப்பர்பாளையம், திருப்பூர் - 641652.

துணை அமைப்பாளர்கள் - 1) கே. சாவித்ரி 7, வடக்கு தி, சேவூர், சேவூர் அஞ்சல், அவிநாசி தாலுக்கா, திருப்பூர் - 641655. 2) எம். லட்சுமி 3/486, குருவாயூரப்பன் நகர், வாரணாசி பாளையம் பிரிவு, வாவிபாளையம் அஞ்சல், திருப்பூர் - 641666. 3) கா. கீதா 52, திலகர் நகர் நால் ரோடு, அனுப்பர்பாளையம், திருப்பூர் - 641652. 4) மீனா (எ) மின்னல் 3/247, பெருமாநல்லூர், கால்நடை மருத்துவமனை எதிரில், திருப்பூர் - 641666. 5) வே. ஷோபனா 3/368சி, பைன் சிட்டி, ராமநாதம்பாளையம், வள்ளிபுரம், திருப்பூர் - 638103. 6) செ. சுதா 8/2895, குடோன்வீதி, பாண்டியன் நகர், பூலுவப்பட்டி, திருப்பூர் - 641602.

### திருப்பூர் வடக்கு மாநகரம்

தலைவர் - எஸ். கோகிலவாணி 1/111, தியாகி குமரன் காலனி 2வது வீதி, செட்டிபாளையம், திருப்பூர் - 641652.

துணைத் தலைவர் - கே.ஆர். கஸ்தூரி 9/54, காந்தி வீதி, 15.வேலம்பாளையம், திருப்பூர் - 641652.

அமைப்பாளர் - க. உமாமகேஸ்வரி 70, ராம் நகர் 4வது வீதி, பி.என். ரோடு, திருப்பூர் - 641602.

துணை அமைப்பாளர்கள் - 1) கே. கன்னியம்மாள் 128, மேற்கு வீதி, நெருப்பெரிச்சல், திருப்பூர் - 641602. 2) எஸ். ஜீவிதா 8/2289, நேரு வீதி, பாண்டியன் நகர், நெருப்பெரிச்சல், திருப்பூர் - 641602. 3) வே. தேவி 23/11, அண்ணா வீதி, குமரானந்தபுரம், திருப்பூர் - 641602. 4) ஆர். திலகவதி 4/704, பாரதி நகர் வடக்கு, பிச்சம்பாளையம், திருப்பூர் - 641603. 5) நா. மாதவி ஓலப்பாளையம் மாரியம்மன் கோவில் முதல் வீதி, திருப்பூர் - 641602. 6) எஸ். பிரியா பாவடிகல் வீதி, மண்ணரை, திருப்பூர் - 641607.

### திருப்பூர் மத்திய மாவட்டம்

திருப்பூர் மத்திய மாவட்ட மகளிர் அணி துணைத் தலைவராக நியமிக்கப்பட்ட திருமதி கு.பத்மாவதி மறைவெய்திய காரணத்தால், திருமதி மு.மல்லிகா (232, பட்டுக்கோட்டையார் நகர் 5வது வீதி, தென்னம்பாளையம் தெரு, திருப்பூர் - 641 604,) அவர்கள் திருப்பூர் மத்திய மாவட்ட துணைத் தலைவராக நியமிக்கப்படுகிறார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 26-08-2025.

ஜெ. ஹெலன்டேவிட்சன்,
செயலாளர்
தி.மு.க. மகளிர் அணி



கோவை மாவட்டம், ஒண்டிப்புதூர் ஓட்டர்பாளையம் மேல்நிலைப் பள்ளியில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்ட விரிவாக்கத்தினை கோவை தெற்கு மாவட்ட கழக செயலாளர் தளபதி முருகேசன் துவக்கி வைத்து பள்ளி குழந்தைகளுடன் உணவு அருந்தினார். இதில் சூலூர் தெற்கு ஒன்றிய செயலாளர் மன்னவன் பள்ளபாளையம் பேரூராட்சி தலைவர் செல்வராஜ், முன்னாள் தலைவர் சாமிநாதன், பேரூர் கழக செயலாளர் கபிலன் உள்பட உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



கோவை வடக்கு மாவட்டம், காந்தி பார்க் பகுதி 73 வது வார்டு பொன்னைய ராஜபுரத்தில் மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி தலைமையில், மாநகராட்சி மேயர் கா.ரங்கநாயகி ராமச்சந்திரன், மேற்கு மண்டலத்தலைவர் தெய்வானை தமிழ்முறை, நகரமைப்பு குழுத்தலைவர் சோமு (எ) த.சந்தோஷ் ஆகியோர் முன்னிலையில் பொள்ளாச்சி பாராளுமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியில் ரூபாய் 22.00 இலட்சம் மதிப்பீட்டில் பொதுவிநியோக கடை கட்டிடம் கட்டும் பணியினை பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே. ஈஸ்வரசாமி துவக்கி வைத்தார். இதில் கழக தகவல் தொழில்நுட்ப அணி துணை செயலாளர் தமிழ்மறை, பேரூர் பேரூராட்சி தலைவர் அண்ணாதுரை, மாவட்ட மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் மு.தியாகு, மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் தென்னை சிவா, ஆர்.எஸ் புரம் பழக்கடை ஆறுமுகம், வட்டக் கழக பொறுப்பாளர்கள் குமரேசன், குட்லி (எ) ராஜேஷ்குமார், தை.ரவிச்சந்திரன் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.